திரு. டி. தங்கப்பன் : தலைவர் அவர்களே, தீவுப் பகுதிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு ஜலண்டு அலவன்ஸ் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கைத்தொழில் ஆசிரியர்களை (Craft Teachers) வேலையிலிருந்து நீக்கப் போவதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. அது அரசாங்கத்தின் எண்ணத்தில் இருக்கிறதா ? அப்படி அவர்கள் நீக்கப்பட்டால், அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நீக்கவேண்டுமென்று அத்தகைய முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. அத் தொழிலை எப்படிப் பயன்படுத்தலாம், ஆசிரியர்களை எப்படிப் பயன் படுத்தலாம், கொடுக்கிற கல்வியை மாணவர்கள் பின்னால் பயன்படுத்திக் கொள்ளும் முறையில் செய்யலாமா என்ற கருத்துதான் தெரிவிக்கப் பட்டிருக்கிறதே த்விர, முடிவு எடுக்கப்படவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, whereas teaching has been considered the noblest of all professions but the sorrowest of all trades, will the Hon. Minister think of the possibility of bringing in fresh taxation proposals to the tune of Rs. 2 crores, in case the Central Government do not come to our aid, as the people are willing to pay towards the salary of the teachers by way of educational cess or educational tax?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறும் கருத்து, நான் அமைக்கப்போகும் கல்வி ஆலோசனை குழுவில் வைத்து, எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு, நிறைவேற்ற வேண்டும் என்றால், பல வகைகளில், பல வசதிகளை கொடுக்க செயல்படலாம். அந்த அந்த கல்வி நிலையங்களைப் பொருத்து, துறையைப் பொருத்து, ஆசிரியர்கள் நிலையைப் பொருத்து, வளர்ச்சி பெறும் வாழ்க்கையைப் பொருத்து, சகல கட்சி தலைவர்கள் குழு முடிவு எடுத்தால், அது உறுதுணையான பலனைக் கொடுக்கும் என்று கருதுகிறேன்.

*303 வினு.—**திரு. கரு. சீமைச்சாமி :**
திரு. கே. விநயகம் : } மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1–4–1966 முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவின் சிபாரிசுகளின் அடிப் படையில் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டுள்ளது.

பயணிகள் கார்களுக்கு வரி

*304. வினு.—**திரு. என். சங்கரய்யா :** மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) சென்னை மோட்டார் வாகனச் சட்ட விதிகளின்படி பயணி களின் காரியங்களுக்காக (for Tourist purposes) என்ற வகையில் சில கார்களுக்கு வரிக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், பயணிகளின் காரியங்களுக்காக என்று பயன் படுத்தப்படும் கார்கள் அனைத்திற்கும் இந்த வரிக் கட்டணக் குறைப்புச் சலுகை நீட்டிக்கப்படுமா ?

1967 ஜூலை 13]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இருக்கை ஒன்றுக்கு கால் ஆண்டுக்கான சலுகை வீத வரியாகிய ரூ. 10 சீருலா வண்டிகளுக்கு (Tourist Luxury Coaches) மட்டுமே பொருந்தும். சுற்றுலாவிற்குப் பயன்படுத்தப்படும் வண்டிகள் அனைத்திற்கும் இந்தச் சலுகையை நீட்டிக்கும் செயற்குறிப்பு இல்லை.

[கேள்விகள் 305—311 ஒற்றிவைக்கப்பட்டன.]

நீதிமன்றங்களில் வழக்குகள்

* 312 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீதி மன்றங்களுக்கு வரும் வழக்குகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்தாக வேண்டுமென கட்டுப்பாடு ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

(இ) இப்போது மிகவும் காலதாமதம் ஏற்படுகிறதென்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(உ) இவைகளை பரிசீலனை செய்ய ஒரு கமிஷன் ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) தெரியாது.

(உ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்பொழுது நீதி மன்றங்களிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு வழக்கும் பல வருஷக் கணக்கில் தாமதம் செய்யப்படுகின்றன. சில கேசுகள் 5 அல்லது 10 வருஷம் கூட ஆகின்றன. அது போன்ற நிலையைத் தவிர்க்க, இப்பொழுது இல்லை என்றாலும், அவற்றை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாவது முடிக்க வேண்டும் என்று ஏதாவது முடிவு காண உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் ஆகின்றன என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. அது தவறான செய்தி. ஒரு வழக்கு பல நீதிமன்றங்களுக்குப் போவதனால், பல ஆண்டுகள் ஆகலாம். அதற்கு நீதி மன்றம் பொறுப்பில்லை. நீதி மன்றங்களுக்குச் செல்வோர்தான் காரணம். அவர்கள் அப்படி பல நீதிமன்றங்களுக்கும் செல்ல உரிமை உண்டு. இருந்தாலும், காலதாமதம் ஆகக்கூடாது என்றுதான் முயற்சிக்கிறோம். புதிய நீதிமன்றங்கள் தேவை என்று உயர்நீதி மன்றம் யோசனை சொன்னால், அதையும் கேட்டு வருகிறோம்.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of of the fact that in the disposal of most of the civil and criminal cases there are three factors like persons contending the case, the judge deciding the case and the lawyer arguing the case. Even though there is an inordinate delay, will the Government issue a general circular to the courts concerned requesting them, in the interest of the people, to dispose of the cases immediately wherever it is humanly possible ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: "ஹ்யூமன்லி பாஸிபிள்" என்று சொன்னார்கள். காரணங்களையும் அவர்களே சொன்னார்கள், கால தாமதத்திற்கு. ஜுடிஷரி ஒரு தனிப்பட்ட, தன்னாட்சி பெற்ற, ஸ்தாபனம். அதில் தலையிட அதிகாரம் கிடையாது. அவ்வப்பொழுது, உயர் நீதி மன்றத்திற்கு தெரிவித்து, அவர்களோடு ஆலோசனை செய்கிறோம். கால தாமதம் ஆகக்கூடாது என்று உயர் நீதி மன்றம் ஒவ்வொரு மாவட்ட